# திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு

**ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், திருநெல்வேலி – 627002.**

*********

2023ம் ஆண்டில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள குடும்ப நல நீதிமன்ற வழக்குகள் மற்றும் இதர வழக்குகளுக்கான சிறப்பு மக்கள் நீதிமன்றம் 14.10.2023 (சனிக்கிழமை) இன்று நடத்த மாண்புமிகு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை உத்தரவிட்டுள்ளது.

அதனடிப்படையில் 2023ம் ஆண்டின் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள குடும்ப நல நீதிமன்ற வழக்குகள் மற்றும் இதர வழக்குகளுக்கான சிறப்பு மக்கள் நீதிமன்றம் 14.10.2023 இன்று திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவால் திருநெல்வேலி மற்றும் 09 தாலுகாவில் மொத்தம் 09 அமர்வுகளுடன் நடைபெற்றது. மேற்கூறிய நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள குடும்ப நல நீதிமன்ற வழக்குகள் மற்றும் இதர வழக்குகளுக்கான சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில், <u>**நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள குடும்ப நல நீதிமன்ற வழக்குகள் மற்றும் இதர வழக்குகள்**</u> என மொத்தம் 311 வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி உட்பட 09 தாலுகாக்களில், சட்டப்பணிகள் ஆணைக்குழுக்களால் மொத்தம 09 அமர்வுகளுடன், தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னையின் உத்தரவுக்கு இணங்க மாண்புமிகு மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவரும் முதன்மை மாவட்ட நீதிபதியுமாகிய திருமதி. C.P.M. சந்திரா அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. 2வது கூடுதல் மாவட் நீதிபதி திரு. V. பத்மநாபன், 3வது கூடுதல் மாவட்ட நீதிபதி திரு. T. பன்னீர்செல்வம், மகளிர் நீதிமன்ற நீதிபதி திரு. G. விஜயகுமார், தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் திரு. S. மனோஜ்குமார், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு சிறப்பு நீதிமன்ற நீதிபதி திரு. C. மோகன்ராம், திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் செயலாளரும் கூடுதல் சார்பு நீதிபதியுமாகிய திரு. G. இசக்கியப்பன், முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திரு. D. சந்தானம், இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி. N. வள்ளியம்மா, நீதித்துறை நடுவர்கள் திருமதி. D. திருவேணி, V. ஆறுமுகம், T. அருண்குமார் மற்றும் திருநெல்வேலி வழக்கறிஞர் சங்க தலைவர் S.R. இராஜேஸ்வரன், செயலாளர் திரு. V. மணிகண்டன், வழக்கறிஞர்கள் மற்றும் திருநெல்வெலி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவர் ஈஷ்வரப்பாண்டியன் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில், <u>**நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள குடும்ப நல நீதிமன்ற வழக்குகள்**</u> **மற்றும் இதர வழக்குகள் உட்பட மொத்தம் 311** <u>**வழக்குகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 119 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.5,16,19,483/- சமரச தொகைக்கு முடிக்கப்பட்டது**</u> மற்றும் <u>**நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத முன்-வழக்குகளாகிய வங்கி கடன் வழக்குகள் 550 எடுத்துக்கொள்ளப்பட்டு 122 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.53,78,705/- சமரசதொகைக்கு முடிக்கப்பட்டது.**</u>

இதற்கான ஏற்பாடுகளை திருநெல்வேலி மாவட்ட சட்டப்பணிகள ஆணைக்குழுவின் செயலாளர் பொறுப்பு கூடுதல் சார்பு நீதிபதியுமாகிய திரு. G. இசக்கியப்பன் அவர்கள் செய்து இருந்தார்கள்.

**சார்பு நீதிபதி/செயலாளர் (பொறுப்பு) ,**
**மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,**
**திருநெல்வேலி.**




**மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிபதி திருமதி. C.P.M. சந்திரா அவர்கள் வாகன விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு காசோலைகள் வழங்கினாா**